(6) அரசினர் தீர்மானம்.

(அ) நிகழ்ச்சி நிரலில் மாறுதல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, "இன்றைய நிகழ்ச்சி நிரலில் 4-வது பகுதியில் உள்ள அரசினர் தனித் தீர்மானத்தை, 3-ம் பகுதியில் உள்ள 7-ம் எண்ணுக்கு முன் எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்." என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

(7) அரசினர் தனித் தீர்மானம்.

மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் விவர அட்டவணையில் செய்யக்கருதும் திருத்தங்களின் வரைவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) VI வது விவர அட்டவணையில் சிலவற்றைச் சேர்த்து, மேற்படி சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதும் திருத்தங்களின் பின்வரும் வரைவுக்கு ஒப்புதல் அளிக்கப்படலாம்:—

வரைவுத் திருத்தங்கள்.

"தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 5/1920 IV -வது விவர அட்டவணையில்—

(1) 12-வது விதிக்குப் பிறகு, பின்வரும் விதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அதாவது:—

"12-A, 9, 10, 11-வது விதிகளின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக் கள் மீது, அம் மனுக்கள் குறித்துக் கவனிக்கும் அதிகாரியாலேயே பெரும் பாலும் ஆணைகள் எழுதப்படவேண்டும் என்பதோடு; சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்து அல்லது அம்மனுக் களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்."

(2) 26-வது விதியில், (b) பகுதிக்குப் பிறகு, பின்வரும் பகுதியைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"(c) 23-வது விதியின் கீழ் வரப்பெறும் மேல் முறையீடுகள் மீது, அம் மேல் முறையீடுகளை முடிவு செய்யும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்படவேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்து அல்லது அம்மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்".

திரு. தீ. சு. நல்லதம்பி : அமைச்சர் இங்கே குறிப்பிட்ட தனித் தீர்மானத்தில், முறையீட்டுக் குழு என்று ஒரு குழு இருந்தது ; அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இந்தத் தீர்மானம் வருகிறபோது, நான் அந்தக் குழுவைப் பற்றி குறிப்பிட வேண்டியிருக்கிறது.

சென்னை மாநகராட்சிக்கு என்று வருகிற முறையீடுகளை பரிசீலனை செய்வதற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் தலைவர் உட்பட, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இருவரும் அடங்கிய ஒரு முறையீட்டுக் குழு இருந்தது. இப்போது அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து அல்லது வேறு யாரையாவது இரண்டு பேர்களை நியமித்து, ஒரு தலைவரை அரசாங்கம் நியமித்து, கடந்த காலத்தில் இருந்ததைப்போல 3 பேர்களைக் கொண்ட ஒரு முறையீட்டுக் குழுவை மீண்டும் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது தனி அதிகாரி இருப்பதால் அந்தக் குழு இயங்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதை கவனிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது நகராட்சிகளிலே செய்திருக்கிற திருத்தம். சென்னை - மாநகராட்சி, மதுரை மாநகராட்சிகளுக்கு தனிச் சட்டம் இருக்கிறது. அதில் திருத்தம் வரும் போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு கவனிக்கும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV -வது விவர அட்டவணையில் சிலவற்றைச் சேர்த்து மேற்படி சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்

கீழ், தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதும் திருத்தங்களின் பின்வரும் வரைவுக்கு ஒப்புதல் அளிக்கப்படலாம் :—

வரைவுத் திருத்தங்கள்.

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920 IV-வது விவர அட்டவணையில்—

(1) 12-வது விதிக்குப் பிறகு, பின்வரும் விதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் ; அதாவது—

"-12-A, 9, 10, 11-வது விதிகளின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மீது, அம் மனுக்கள் குறித்துக் கவனிக்கும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்படவேண்டும் என்பதோடு ; சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்து அல்லது அம்மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்"

(2) 26-வது விதியில், (b) பகுதிக்குப் பிறகு, பின்வரும் பகுதியைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"(c) 23-வது விதியின் கீழ் வரப்பெறும் மேல் முறையீடுகள் மீது, அம் மேல் முறையீடுகளை முடிவு செய்யும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்படவேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்தி அல்லது அம்மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்".

தனித் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(7) கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) 1979 திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் என்று மொழிகிறேன்.

* 1979, அக்டோபர் 29-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.